www.Padasalai.Net www.TrbTnpsc.com

V10SS

விருதுநகர் மாவட்டம்

இரண்டாம் திருப்புதல் பொதுத் தேர்வு - பிப்ரவரி 2025

-----

வகுப்பு 10

காலம்: 3.00 மணி **சமூக அறிவியல்** மதிப்பெண்கள்: 100

## பகுதி - I

**சரியான விடையைத் தேர்ந்தெடு:** **14×1=14**

1) பன்னாட்டுச் சங்கத்தின் முதல் பொதுச் செயலாளர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
அ) பிரிட்டன் ஆ) பிரான்ஸ் இ) டச்சு ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
2) அமெரிக்கா தனது முதல் அணுகுண்டை எங்கே வீசியது?
அ) கவாசாகி ஆ) இன்னோசிமா இ) ஹிரோஷிமா ஈ) நாகசாகி
3) வேலூர் புரட்சிக்குப் பின் திப்புசுல்தானின் மகன்கள் எங்கு அனுப்பப்பட்டார்கள்?
அ) கல்கத்தா ஆ) மும்பை இ) டெல்லி ஈ) மைசூர்
4) நீல் தர்பன் நாடகம் மூலமாக இண்டிகோ பயிரிடும் விவசாயிகளின் இன்னல்கள் குறித்து ஆங்கிலேயரின் கவனத்துக்கு கொண்டு சென்றவர் யார்?
அ) தீன் பந்துமித்ரா ஆ) ரொமேஷ் சந்திரதத்
இ) தாதாபாய் நௌரோஜி ஈ) பிர்சா முண்டா
5) அரசு அதிகாரிகளைத் தேர்வு செய்ய ............ நீதிக் கட்சியால் நிறுவப்பெற்றது.
அ) பணியாளர் தேர்வு வாரியம் ஆ) பொதுப்பணி ஆணையம்
இ) மாநிலப் பணியாளர் ஆளெடுப்பு வாரியம் ஈ) பணியாளர் தேர்வாணையம்
6) **பொருந்தாததைத் தேர்ந்தெடுக்கவும்:**
அ) வெள்ளப்பெருக்கு கால்வாய் ஆ) வற்றாத கால்வாய்
இ) ஏரிப்பாசனம் ஈ) கால்வாய்
7) யுனெஸ்கோவின் (UNESCO) உயிர்க்கோளப் பாதுகாப்பு பெட்டகத்தின் ஒரு அங்கமாக இல்லாதது ............
அ) நீலகிரி ஆ) அகத்தியமலை இ) பெரிய நிக்கோபர் ஈ) கட்ச்
8) பின்னடையும் பருவக்காற்று ............விருந்து ஈரப்பதத்தை எடுத்துக்கொள்கிறது.
அ) அரபிக்கடல் ஆ) வங்கக்கடல் இ) இந்தியப் பெருங்கடல் ஈ) தைமூர்க் கடல்
9) தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும் டெல்டா ............
அ) காவிரி டெல்டா ஆ) மகாநதி டெல்டா
இ) கோதாவரி டெல்டா ஈ) கிருஷ்ணா டெல்டா
10) மக்கள் தொகையின் பல்வேறு அம்சங்கள் பற்றிய அறிவியல் பூர்வமான படிப்பு
அ) வரைபடவியல் ஆ) மக்களியல் இ) மானுடவியல் ஈ) கல்வெட்டியல்
11) அமைச்சர்கள் குழு ஒட்டுமொத்தமாக இதற்கு பொறுப்புடையவர்களாவர்.
அ) குடியரசுத்தலைவர் ஆ) மக்களவை இ) பிரதம அமைச்சர் ஈ) மாநிலங்களவை
12) மக்மகான் எல்லைக்கோடு எந்த இரு நாடுகளுக்கும் இடையே உள்ள எல்லை ஆகும்?
அ) பர்மா - இந்தியா ஆ) இந்தியா - நேபாளம்
இ) இந்தியா - சீனா ஈ) இந்தியா - பூடான்
13) இந்திய அரசாங்கத்தால் 1991 இல் ............ஐ அறிமுகப்படுத்தப்பட்டது.
அ) உலகமயமாக்கல் ஆ) உலக வர்த்தக அமைப்பு
இ) புதிய பொருளாதார கொள்கை ஈ) இவற்றில் எதுவுமில்லை
14) **கூற்று** : நீலகிரி தமிழ்நாட்டின் குறைந்த மக்கள்தொகை கொண்ட மாவட்டம்.
**காரணம்** : இது தமிழ்நாட்டின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது.
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று மற்றும் காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல.
இ) கூற்று சரி. ஆனால் காரணம் தவறு. ஈ) கூற்று தவறு. ஆனால் காரணம் சரி.

## பகுதி - II

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **10×2=20**
**(வினா எண் 28-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)**

15) முதல் உலகப்போருக்குப் பிந்தைய உலகத்தின் மூன்று முக்கிய சர்வாதிகாரிகளின் பெயர் என்ன?
16) முஸ்தபா கமால்பாட்சா வகித்த பாத்திரமென்ன?
17) திருச்சிராபள்ளி பிரகடனத்தின் (1801) முக்கிய கூறுகளை தருக.
18) பிரம்மசமாஜத்தால் ஒழிக்கப்பட்ட சமூகத் தீமைகள் யாவை?
19) ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றி விவரிக்கவும்.
20) பருவமழை வெடிப்பு என்றால் என்ன?

Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



21) தகவல் தொடர்பு என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
22) தமிழ்நாட்டின் எல்லைகளைக் குறிப்பிடுக.
23) இந்தியாவில் காணப்படும் மண் வகைகளின் பெயர்களைப் பட்டியலிடுக.
24) இந்தியக் குடியரசுத் தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?
25) வெளியுறவுக் கொள்கை என்றால் என்ன?
26) மொத்த உள்நாட்டு உற்பத்தி என்றால் என்ன?
27) பசுமைப் புரட்சியின் விளைவுகள் யாவை?
28) தொழில்மயமாதல் என்றால் என்ன?

## பகுதி - III

**III. எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **10×5=50**
**(வினா எண் 42-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)**

29) **கோடிட்ட இடங்களை நிரப்புக:**
   i) .............. கடன் குத்தகைத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
   ii) நவீன சீனாவின் தந்தை என்று அழைக்கப்படுபவர் .............. ஆவார்.
   iii) .............. தமிழ் மொழியில் தூய்மைவாதத்தின் தந்தையெனக் கருதப்படுகிறார்.
   iv) மும்பை மற்றும் டெல்லியை அடுத்த இந்தியாவின் மூன்றாவது பெரிய விமான நிலையம் ..............
   v) .............. ஆல் உலகமயமாக்கல் என்ற பதம் கண்டுபிடிக்கப்பட்டது.
30) பன்னாட்டுச் சங்கத்தின் பணிகளை குறிப்பிடுக.
31) சீனாவை ஒரு பொதுவுடைமை நாடாக்க மாசேதுங்கின் பங்களிப்பை விளக்குக.
32) பெண்களின் மேம்பாட்டிற்கு 19 ஆம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து கட்டுரை வரைக.
33) இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரி.
34) இந்தியாவில் உள்ள பருத்தி நெசவாலைகளின் பரவல் பற்றி எழுதுக.
35) காவிரி ஆறு குறித்து தொகுத்து எழுதுக.
36) அ) **வேறுபடுத்துக:**
   i) புதுப்பிக்க இயலும் மற்றும் புதுப்பிக்க இயலா வளங்கள்
   ii) அச்சு ஊடகம் மற்றும் மின்னணு ஊடகம்
   ஆ) **காரணம் கூறு:** மலைப்பகுதிகள் சமவெளிகளைவிடக் குளிரானவை.
37) பிரிக்ஸ் (BRICS) கூட்டமைப்பு உருவானதற்கான காரணம் மற்றும் அதன் நோக்கங்களை எழுதுக.
38) அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுக.
39) GDPஐ கணக்கிடும் முறைகள் யாவை? அவைகளை விவரி.
40) பொது விநியோக முறையை விவரிக்கவும்.
41) **காலக்கோடு வரைக:**
   1930 முதல் 1950 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட முக்கிய ஐந்து இந்திய நிகழ்வுகளைக் காலக்கோட்டில் எழுதுக.
42) **உலக வரைபடத்தில் பின்வரும் இடங்களைக் குறிக்கவும்:**
   (i) பிரான்ஸ் (ii) இத்தாலி (iii) மொராக்கோ
   (iv) பசிபிக்பெருங்கடல் (v) சான்பிரான்சிஸ்கோ

## பகுதி - IV

**பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **2×8=16**

43) அ) காந்தியடிகளை ஒரு மக்கள் தலைவராக உருமாற்றம் செய்ய உதவிய காரணிகள் என்ன என்று ஆராயவும். **(அல்லது)**
   ஆ) ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு, செயல்பாடுகளை ஆய்வு செய்க.
44) அ) **கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்:**
   (i) ஆரவல்லி மலைத்தொடர் (ii) தக்காணபீடபூமி
   (iii) சிலிகா ஏரி (iv) மன்னார் வளைகுடா
   (v) ஹீராகுட் அணை (vi) பன்னா உயிர்க்கோள காப்பகம்
   (vii) இமயமலை (viii) அந்தமான் நிக்கோபார் தீவுகள்

**(அல்லது)**

   ஆ) **கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்:**
   (i) எண்ணூர் (ii) நீலகிரி மலைகள்
   (iii) பாக்நீர்ச்சந்தி (iv) சோழமண்டல கடற்கரை
   (v) பருத்தி விளையும் பகுதி (vi) கோயமுத்தூர்
   (vii) சென்னை (viii) கன்னியாகுமரி

Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com